### (ஈ) வால்பாறை வட்டத்தில் தனியார் காடுகள் மற்றும் விவசாய நிலங்களை வீட்டுமனை நிலங்களாக மாற்றுவதால் வனம் மற்றும் சுற்றுப்புறச்சூழல் பாதிக்கப்படுவது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. டாக்டர் அ. ஸ்ரீதரன், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். டாக்டர் அ. ஸ்ரீதரன்.

**டாக்டர் அ. ஸ்ரீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், வால்பாறை வட்டத்தில் தனியார் காடுகள் மற்றும் விவசாய நிலங்களை வீட்டுமனை நிலங்களாக மாற்றுவதால் வனம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுதல் குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

*முற்பகல் 11.30*

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

#### அறிக்கை

வால்பாறை நகரியத்தில், நில அளவை எண். 28/1-ல் அமைந்துள்ள 116 ஏக்கர் நிலம் புதுத்தோட்டம் எஸ்டேட் நிறுவனத்திற்கு சொந்தமானது. இந்நிலம் வால்பாறை முழுமைத் திட்டத்தில் விவசாயப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. புதுத்தோட்டம் எஸ்டேட்டின் நிர்வாக இயக்குநர் தங்களின் நிறுவனத்திற்கு சொந்தமான நில அளவை எண். 28/1-ல் அமைந்துள்ள 116 ஏக்கர் நிலப்பரப்பு தற்பொழுது காப்பி பயிர் செய்ய இயலாத நிலையில் உள்ளதால், அந்நிலங்களை விவசாய நில உபயோகத்தில் இருந்து குடியிருப்பு உபயோகத்திற்கு மாற்றித் தருமாறு கேட்டுக்கொண்டார்.

2. வால்பாறை உள்ளூர் திட்டக் குழுமம் தன்னுடைய 27-3-91 நாளிட்ட 162 எண்ணிட்ட தீர்மானத்தில் வால்பாறை புதுத்தோட்டம் எஸ்டேட்டிற்கு சொந்தமான 116 ஏக்கர் நிலத்தினை விவசாய உபயோகத்தில் இருந்து குடியிருப்பு உபயோகத்திற்கு மாற்றம் செய்ய பரிந்துரை செய்துள்ளது. வால்பாறை நகரியத்தின் நிர்வாக அலுவலரும் தன்னுடைய 2-4-1991 நாளிட்ட கடிதத்தில் மேலே கண்டுள்ள நில உபயோக மாற்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளார். கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியாளரும் தன்னுடைய 7-5-1991 நாளிட்ட கடிதத்தில் மேலே கண்டுள்ள நில உபயோக மாற்றத்திற்கு கீழ்க்கண்ட காரணங்களைக் கருத்தில் கொண்டு பரிந்துரை செய்துள்ளார்:—

(i) வால்பாறை நகரியத்தின் சுற்றுப்புறத்தில் வாழும் மக்கள் வேலை வாய்ப்புத்தேடி வால்பாறை நகரியத்திற்கு குடியேறி வருவதால் வால்பாறை நகரியத்தில் வீட்டுமனைக்கான தேவை அதிகரித்துள்ளது.

(ii) வால்பாறை நகரியத்தினை சுற்றியுள்ள நிலங்கள் அனைத்தும் டீ/ காபி எஸ்டேட்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(iii) வால்பாறை நகரியத்தில் இருந்து 1 கிலோ மீட்டர் மற்றும் 2 கிலோமீட்டர் தூரத்தில் முறையே காமராஜ் நகர் மற்றும் பி.ஏ.பி. நகர் என்ற இரண்டு குடியிருப்பு தொகுதிகள் வளர்ச்சியடைந்துள்ளன. பரிசீலனையில் உள்ள மனுதாரரின் நிலம் இவ்விரண்டு குடியிருப்பு தொகுதிகளுக்கும் அருகில் உள்ளது. ஆதலால், மனுதாரரின் நிலத்தினை குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்தால் வால்பாறை நகரியத்தின் மக்களுக்கு தேவையான குடியிருப்பு மனைகள் கிடைக்கலாம்.

3. மேலே பத்தி இரண்டில் கண்டுள்ள காரணங்களினால் கோயம்புத்தூர்-நீலகிரி மண்டல நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர் ஆகியோர் மனுதாரரின் நிலத்தினை குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்ய பரிந்துரை செய்தார்கள். இத்துறையால் அறிவுறுத்தப்பட்டத்திற்கிணங்க, நகர் ஊரமைப்பு இயக்குநர் மனுதாரரின் நிலத்தினை புலத்தணிக்கை செய்துள்ளார். அதன் பின்பு அவர், வனத்துறையின் ஒப்புதலையும், மலைப்பகுதிகள் பாதுகாப்பு குழுமத்தின் ஒப்புதலையும் பெற்ற பின்பு மனுதாரரின் நிலத்தினை குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்வதற்கான ஆணையினை பிறப்பிக்குமாறு பரிந்துரை செய்துள்ளார்.

4. மேலே பத்தி 3-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநரின் திருத்திய செயற்குறிப்பினை பரிசீலனை செய்தபோது, அது 1949 ஆம் ஆண்டின் தமிழ்நாடு தனியார் வனப் பாதுகாக்கும் சட்டம், 1955 ஆம் ஆண்டின் தமிழ்நாடு வனப்பகுதிகள் (மரங்கள் பாதுகாப்பு) சட்டம் மற்றும் 1980-ம் ஆண்டின் தமிழ்நாடு வனப்பகுதி பாதுகாப்புச் சட்டம் ஆகிய சட்டங்களில் சில காப்புரைகள் (ஷரத்துக்கள்) மீறப்பட்டுள்ளதாக தெரியவந்தது. ஆதலால் இப்பொருள் சம்பந்தமாக விரிவான அறிக்கையினை தெரிவிக்குமாறு முதன்மை வனப்பாதுகாப்பு அலுவலர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். அவரின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

5. குடியிப்பு பகுதியாக மாற்றம் செய்ய பரிசீலனையில் உள்ள மனுதாரரின் நில அளவு 116 ஏக்கராக உள்ளதாலும், மேலும் இந்நில உபயோக மாற்றம் மேலே பத்தி 4-ல் தெரிவித்துள்ளதுபோல் வனப்பாதுகாப்பு சட்டங்களின் சில காப்புரைகளை மீறுவதாலும் இச்செயற்குறிப்பை கூர்ஆய்வு செய்து அறிக்கை அளிப்பதற்காக, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, வேளாண்மைத் துறை, வனம் மற்றும் சுற்றுப்புறச்சூழல் துறை, மற்றும் ஊரக வளர்ச்சித்துறை

ஆகிய துறைகளின் செயலர்கள், முதன்மை வனப்பாதுகாப்பு அலுவலர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட ஒரு உயர்மட்ட அலுவலர்கள் குழு அமைக்கப்பட்டது. இக்குழு கடந்த 17-12-1993 மற்றும் 18-12-1993 நாட்களில் மனுதாரரின் நிலத்தினை புலத்தணிக்கை செய்துள்ளது. இக்குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

**டாக்டர் அ. ஸ்ரீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்ட விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அந்த விவர அறிக்கையின் அடிப்படையில், தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கின்றேன். விவர அறிக்கையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அமைக்கப்பட்ட நகரியக் குழு தீர்மானம் இயற்றியதை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் நியமிக்கப்பட்ட -re-constitute செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு மேற்படி தீர்மானத்தை ஆய்வு செய்ததில், அதில் பல சட்டதிட்டங்களை மீறிச் செய்திருக்கிறார்கள் என்றும், வனத் துறையினுடைய ஒப்புதலைப் பெறாமல் செய்யப்பட்டிருக்கிறது என்றும், வனத்துறையின் மூலம் எழுத்து முலமாக அந்த ஆட்சேபணைகளைப் பெற்று, இந்த நகரியத்தால் வழங்கப்பட்ட (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்களுடைய இடங்களில் அமரவேண்டும். இப்போது உறுப்பினர் கேட்கிற கேள்விகளுக்கு அமைச்சர் பதில் சொல்ல வேண்டிய நேரம்.

**டாக்டர் அ. ஸ்ரீதரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது, 27-3-1993 அன்று நகரியத்தால் உரிமம் வழங்கப்பட்ட அந்த உத்தரவை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சியில் அமைக்கப்பட்ட அந்த நகரியக் குழு, சட்டதிட்டங்களை மீறியதால் அதை நிராகரித்துவிட்டது என்ற ஒரு ஆர்டரை இந்த அவையில் வைக்கவில்லை. இரண்டாவது, கோவை, நீலகிரி மண்டல நகர்–ஊரமைப்பு இயக்குநர், வனத்துறையினுடைய பல்வேறு ஆட்சேபணைகளைத் தெரிவித்த போதும், வனத் துறையினுடைய ஆட்சேபணைகளைக் கருத்தில் கொள்ளாமல் தன்னிச்சையாகவே உரிமம் வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்: (மணியடிக்கப் பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சரின் கவனத்திற்கு அதெல்லாம் வந்திருக்கும். நீங்கள் கேட்கவேண்டியது ஒரு விளக்கம்: அதைக் கேள்வியாகக் கேளுங்கள். இப்படி விரிவான பேச்சுக்கு வழக்கமாக அனுமதிப்பதில்லை.

[*1994 ஜனவரி 5*

***டாக்டர் அ. ஸ்ரீதரன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, முதன்மை வனப் பாதுகாவலருடைய ஆட்சேபணை இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் இந்த முயற்சியைத் தடை செய்யவேண்டும் எனக் கோருகிறேன்.

***மாண்புமிகு திரு. சே. ரகுபதி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் எந்தவிதமான உரிமங்களோ அல்லது உத்தரவுகளோ இறுதி நிலையிலே இதுவரை அளிக்கப்படவில்லை என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆட்சேபணைகள் குறித்து விசாரிப்பதற்காக அரசுத் துறைச் செயலாளர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு, அந்த இடத்தைப் பார்வையிட்டு வந்திருக்கிறது. அந்தக் குழுவினுடைய அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அறிக்கையின் அடிப்படையில் அரசு இறுதி முடிவினை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** அடுத்த கவன ஈர்ப்பு, (குறுக்கீடு) டாக்டர் ஸ்ரீதரன், உங்களுக்கு ஒன்றே ஒன்றுதான். அதாவது, இரண்டுக்கு மேற்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்கிறபோது, ஒரு கேள்விதான் அனுமதிப்பது உண்டு.

அடுத்த கவன ஈர்ப்பு, திரு. எச். எம். ராஜு, இருக்கையில் இல்லை.

அடுத்த கவன ஈர்ப்பு, திரு. கே. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

திரு. சிங்காரம், உங்களுடைய கவன ஈர்ப்பு குறித்துக் கேளுங்கள்.

***திரு. ஆர். சிங்காரம் :*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. கே. கந்தசாமி அவர்களின் கவன ஈர்ப்பு குறித்து, அவருக்குப் பதிலாக . . .

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** ஒருவருடைய கவன ஈர்ப்பில் இன்னொருவர் வரமுடியாது. உங்களுடைய கவன ஈர்ப்பு பற்றி கேளுங்கள். (குறுக்கீடு)

## (உ) பேராவூரணி சோழன்போக்குவரத்துக் கழக டெப்போவிலிருந்து ஓடிக்கொண்டிருந்த சில நகரப் பேருந்துகள் நிறுத்தப்பட்டது குறித்து.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு.ஆர் சிங்கராம், அவருடைய கவன ஈர்ப்பை எடுத்துக்கொள்ள அழைக்கப்படும் போது இல்லாவிட்டாலும், அவருடைய கவன ஈர்ப்பைத் திரும்ப எடுத்துக்கொள்ளவேண்டும் என்று வந்து கேட்கிற காரணத்தினால் அவருடைய வேண்டுகோளை ஏற்று, அவருடைய கவன ஈர்ப்பு எடுத்துக் கொள்ளப்படுகிறது. திரு. ஆர். சிங்காரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவன்த்திற்குக்கொண்டு வருவார். திரு. ஆர். சிங்காரம்.